# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2017 *சனவரி*

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு
## PROCESSES, CONTROLS AND AUDIT

---

**பொதுவான கருத்துக்கள்**

செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு (AA34) எனும் இந்த வினாப்பத்திரம் கற்கைப் புத்தகத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒன்பது (9) கட்டாயமான வினாக்களை கொண்டுள்ளது. இங்கு மூன்று(3) பிரிவுகள் உள்ளன. **பிரிவு A** ஒவ்வொன்றும் ஐந்து (5) புள்ளிகளைக் கொண்ட நான்கு (4) கட்டாய வினாக்களை கொண்டுள்ளது. **பிரிவு B** ஒவ்வொன்றும் பத்து (10) புள்ளிகளைக் கொண்ட மூன்று (3) கட்டாய வினாக்களை கொண்டுள்ளது. பிரிவு **C** ஒவ்வொன்றும் இருபத்தைந்து (25) புள்ளிகளைக் கொண்ட இரு (2) கட்டாய வினாக்களை கொண்டுள்ளது.

சகல வினாக்களும் கற்கைப் புத்தகத்தை அடிப்படையாக கொண்டதுடன் பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவும் நடைமுறைச் சூழலில் பிரயோக இயலுமையும் பரீட்சிக்கப்பட்டன. பரீட்சார்த்திகள் கற்கைப் புத்தகத்தினை நன்கு கற்று, கடந்த கால வினாப்பத்திரங்களை செய்து பயிற்சி பெற்றிருப்பின், இந்த வினாப்பத்திரத்தில் இலகுவாக 50 க்கு அதிகமான புள்ளிகள் பெற்றிருக்க முடியும்.

பரீட்சார்த்திகளின் செயற்பாடுகள் ஓரளவு திருப்திகர மட்டத்தில் இருந்தன. கணிசமான பரீட்சார்த்திகள் 65 க்கும் அதிகமான புள்ளிகளை பெற்றுள்ளனர். இது அந்த மாணவர்கள் கற்கைப் புத்தகத்தின் கோட்பாட்டு ரீதியான அறிவினை பெற்று உண்மையான வியாபார மற்றும் கணக்காய்வு சூழல்களில் அவற்றின் பிரயோகத்தினை விளங்கியமையை காட்டுகின்றது. மேலும், கணிசமான பரீட்சார்த்திகள் 25 க்கும் குறைவான புள்ளிகள் பெற்றுள்ளனர். அவர்கள் எழுதிய விடைகளிலிருந்து அவர்கள் கற்கைப் புத்தகத்தை நன்கு கற்காமலும், கடந்த கால பரீட்சை வினாப்பத்திரங்களை பயிற்சி செய்யாமலும் இருப்பதனை காட்டுகின்றது.

அனேகமான பரீட்சார்த்திகள் வினாப் பத்திரத்திலுள்ள சகல வினாக்களுக்கும் விடையெழுத முயற்சித்து உள்ளபோதிலும், வினாக்களின் சில பகுதிகளுக்கு விடை எழுதியிருக்கவில்லை. இதற்குக் காரணம் உரிய முறையில் காலத்தினை முகாமை செய்யாமை, போதிய அறிவில்லாமை அல்லது தவறான பரீட்சை நுட்பம் போன்றவையாக இருக்கக்கூடும். இவற்றிற்கு மேலாக விடைத்தாள்களை திருத்திய போது கீழ்வரும் பொதுவான விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

- பகுப்பாய்வு ஆற்றல் இல்லாமை
- தெளிவற்ற கையெழுத்து
- அதிக புள்ளிகளைக் கொண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடையெழுதுதல்.
- குறைவான புள்ளிகளைக் கொண்ட வினாக்களுக்கு நீண்ட விடைகளை எழுதுதல்.
- வினாவில் கேட்கப்பட்டவற்றை சரியாக விளங்கிக்கொள்ளாது தொடர்பற்ற விடைகளை எழுதுதல்.
- விடைகளை நன்கு திட்டமிடாது, தொடர்பற்ற விடைகளை எழுதுதவ்.
- வினாப்பத்திரத்தின் இறுதியிலுள்ள வினா வினைச்சொற்களை (**Action Verb)** கடைப்பிடிக்காமை.

## பரிவு A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

**வினா இல. 01** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா வெளிநாடுகளில் தொழிற்படுகின்ற கூட்டிணைவு வாடிக்கையாளருக்கு மென்னுறுப்புப் பொதிகளை விருத்திசெய்யும் கம்பனி தொடர்புபட்ட மூன்று (3) பொருளாதாரக் காரணிகள் மற்றும் இரண்டு (2) தொழில்நுட்பக் காரணிகள் பற்றி வினவப்பட்டது.

இந்த வினாவுக்கான பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்ததுடன், பரீட்சார்த்திகள் சராசரியாக 3 முதல் 4 வரையான புள்ளிகளை பெற்றனர். கணிசமான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளை பெற்றுள்ளனா். எனினும், கணிசமான பரீட்சார்த்திகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தகவற் தொழில் நுட்ப வியாபாரங்களை வைத்திருப்பதன் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள், தகவற் தொழில்நுட்ப வியாபாரத்தை ஆரம்பித்தலில் கவனத்திற் கொள்ளவேண்டிய காரணிகள், தகவற் தொழில்நுட்பத் துறையில் வேறுபட்ட அபிவிருத்திகள் மற்றும் அந்த அபிவிருத்திகளை பிரயோகிக்கும் நாடுகள் போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**வினா இல. 02** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா இரண்டு பகுதிகளை கொண்டிருந்தது. பகுதி A யில் செல்லிடத் தொலைபேசிகளை விற்பனை செய்யும் நிறுவனங்களை பாதிக்கும் அக இடர்கள் மூன்று (3) பற்றிய அறிவும் பகுதி B யில் மேற்படி இடர்களை குறைப்பதற்கான இரண்டு (2) வகையான நுட்பங்கள் பற்றியும் வினவப்பட்டது.

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்த பெறுபேறுகள் திருப்திகரமாக இருக்கவில்லை. இந்த வினாவின் இரு பகுதிகளுக்கும் அனேக பரீட்சார்த்திகளால் 3 க்கும் குறைவான புள்ளிகளையே பெறமுடிந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் இந்த வினாவுக்கு முழுமையான புள்ளிகளை பெற்றிருந்தனர். பகுதி A க்கு இலாபத்திறன், முகாமைத்துவம், உற்பத்திக்குறி வேறுபடுத்தல், கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமை, தவறான முகாமைத் தீர்மானங்கள் போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர். பகுதி B க்கு கட்டுப்பாட்டுச் சூழல், உற்பத்திக் கட்டுப்பாடு, அகக் கட்டுப்பாடுகள், CCTV படப்பிடிப்புக் கருவியை நிறுவுதல், பாதுகாப்பு ஊழியர்களை வேலைக்கு அமர்த்துதல், ஊழியர்களை திருப்தி செய்தல், முறையான வியாபாரத் திட்டத்தினை கொண்டிருத்தல், முறையான தகவற் தொழில்நுட்ப கட்டுப்பாட்டு முறைமையை கொண்டிருத்தல் போன்ற தொடர்பற்ற விடைகள் எழுதப்பட்டன.

**வினா இல. 03** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா இரு பகுதிகளை கொண்டிருந்தது.

**பகுதி A** யில் கணக்காய்வுப் பங்காளர் தமது வழிகாட்டலில் கணக்காய்வு அணியின் அங்கத்தவர்கட்டு தெரிவிக்கவேண்டிய மூன்று (3) விடயங்கள் பற்றி வினவப்பட்டது.

**பகுதி B** யில் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது பங்காளரின் மேற்பார்வையின்கீழ் உட்படும் இரு (2) தொழிற்பாடுகள் பற்றி வினவப்பட்டது..

ஒட்டுமொத்தப் பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. கணிசமான பரீட்சார்த்திகள் பகுதி A யில் அதிக புள்ளிகளை பெற்றிருந்தனர். எனினும், பகுதி B யில் குறைந்த புள்ளிகளையே பெற்றனர். பகுதி A க்கு கணக்காய்வு அபிப்பிராயத்தினை எவ்வாறு தெரிவிப்பது, கணக்காய்வு அபிப்பிராயங்களின் வகை, கணக்காய்வாளரின் வரையறைகள், ஈடுபடுத்தற் கடிதத்தின் கட்டுறுப்புக்களும் நிபந்தனைகளும், கணக்காய்வு ஈடுபடுத்தலின் காலவரையறை, முகாமைப் பொறுப்புக்கள், கணக்காய்வளர் ஏற்படுத்திய இரகசியத் தனமை போன்ற தொடர்பற்ற விடைகள் எழுதப்பட்டன. பகுதி B க்கும் பல தொடர்பற்ற விடைகள் எழுதப்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் மேற்பார்வை கணக்காய்வுத் தரக்கட்டுப்பாட்டின் ஒரு அங்கமென விளங்கியிருந்த பாதிலும், தமது விடையில் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எழுதினர்.

**வினா இல. 04** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவின் பகுதி A யில் கட்டுப்பாட்டுச் சூழலின் கருத்தும், பகுதி B யில் கட்டுபாட்டுச் செயன் முறையில் உள்ளடக்கப்பட்ட மூன்று (3) அகக் கட்டுப்பாட்டு வகைகள் பற்றியும் வினவப்பட்டது.

இந்த வினாவுக்கான விடைகள் மிகவும் மோசமானவையாக இருந்தன. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் இந்த வினாவுக்கு முழுப் புள்ளிகளை பெறக்கூடியதாக இருந்தபோதிலும். கணிசமான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு புள்ளிகள் எதனையும் பெற்றிருக்கவில்லை. அனேகமான விடைகள் தொடர்பற்றவையாக இருந்தன. பகுதி A க்கான விடையி அனேகமான பரீட்சார்த்திகள் கட்டுப்பாட்டுச் சூழல் என்பது முகாமையால் நியமிக்கப்பட்ட நபர்களின் குழு எனவும், சூழல் கணக்காய்வாளருடன் தொடர்புபட்டது எனவும், இது கணக்காய்வு விதிமுறைகள் மற்றும் ஆவணங்களை கொண்டதெனவும் எருதினர். வேறு சிலர் கட்டுப்பாட்டுச் சூழலானது அக மற்றும் புறக் கட்டுப்பாடுகளை கொண்டதாக எழுதினர். பகுதி B க்கான விடைகள் விற்பனை, கடன்பட்டோர், கொள்வனவு, கடன்கொடுத்தோர் மற்றும் தொக்குகள் தொடர்புபட்ட அகக் கட்டுப்பாடு போன்ற தொடர்பற்ற விடைகளை உள்ளடக்கின. சில பரீட்சார்த்திகள் வினாவின் தேவைப்பாடு அகக்கட்டுப்பாட்டின் வகைகள் என விளங்கிக்கொண்டு, தொழிற்பாடு, நிதி, ஒத்திசைவு ஆகியவற்றை தமது விடைகளில் எழுதியிருந்தனர். .

## பிரிவு B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

**வினா இல. 05** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினா, இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம் (AAT ஸ்ரீலங்கா) வழங்கிய நன்னெறிக் கோவையின் (Code of Ethics) அடிப்படையில் அமைந்தது. இது இரு பகுதிகளை கொண்டது.

**பகுதி A** : AAT ஸ்ரீலங்காவின் அங்கத்தவர்களுக்கு பிரயோகிக்கக்கூடிய அடிப்படைத் தத்தவங்கள் நான்கு (4) பற்றி வினவப்பட்டது. அனேகமான விடைகள் திருப்திகரமானவையாக இருந்ததுடன், பலர் முழுமையான புள்ளிகளைப் பெற்றனர். எனினும் சில பரீட்சார்த்திகள் வினாவினை நன்கு விளங்கிக கொள்ளாது தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர். அந்த தொடர்பற்ற விடைகள் சுயாதீனம், நம்பகத்தன்மை, ''ரணத்துவம், செம்மை, சுயாதீன்மாக அபிப்பிராயம் வழங்குதல், வகைகூறல், உறுதிப்பாடு, சுயாதீன கணக்காய்வு விதிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கின.

**பகுதி B:** அடிப்படைக் கோட்பாடுகளான சுயநாட்டம் (self-interest), நியாயப்படுத்தல் (advocacy), பரிட்சயம் (familiarity) ஆகிய இடர்களுக்கு இசைவாக இருத்தலின் அச்சுறுத்தல்கள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. இது மினவும் இலேசான வினாவாக இருப்பினும், பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. ஒருசில பரட்சார்த்திகள் அதிக புள்ளிகளை பெறக்கூடியதாக இருந்தபோதிலும், அனேக பரீட்சார்த்திகள் கோட்பாட்டினை தவறாக விளங்கிக்கொண்டு எந்தவகையிலும் தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர். சுயநாட்ட இடரின்கீழ் எழுதப்பட்ட தொடர்பற்ற விடைகள் சொந்த எண்ணங்களின்படி தொழிற்படுதல், AAT தத்துவங்களுக்கு அமைவாக தொழிற்படல், சுயநாட்டம் காரணமாக தவறான தீர்மானங்களை எடுத்தல் ஆகியவற்றை அடங்கியிருந்தன. நியாயப்படுத்தல் இடரின்கீழ் தொடர்பற்ற விடைகள் தவறான ஆலோசனைப்படி தொழிற்படல், உயர்தவ அலுவலர் மற்றும் முகாமையாளர்களின் ஆலோசனைப்படி தொழிற்படல், வெளித்தரப்பினரின் ஆலோசனை பெறல் போன்ற விடைகளை எழுதி யிருந்தனர். பரீட்சய இடரின்கீழ் தனிப்பட்ட சினேகத்தினை கவனத்திற் கொள்ளாது கணக்காய்வினை மேற்கொள்ளல், தகவல்களை தவறாக வெளிக்காட்டல், ஆகிய பொருத்தமற்ற விடைகள் எழுதப்பட்டன.

**வினா இல. 06** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

பெண்கள் ஆடைகளின் சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள **Fashions (Pvt) Ltd** கம்பனியின் தருநிலை தொடர்புபட்ட இந்த வினா இரு பகுதிகளைக் கொண்டது.

**பகுதி A** யில் தருநிலையில் தரப்பட்ட 31 மார்ச் 2016 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சில விடயங்களின் தாக்கம்பற்றி வினவப்பட்டது. இங்கு பரீட்சார்த்தி எவ்வாறு கணக்காய்வுப் பொருண்மை மட்டம் மற்றும் தருநிலையில் தரப்பட்ட விடயங்களுக்கு இடையிலான தொடர்பினை இனங்கண்டு கணக்காய்வாளரின் அறிக்கைமீது அதன் தாக்கம்பற்றி விளக்குவார் என பரீட்சிக்கப்பட்டது. இந்தப் பகுதிக்கான பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. பல பரீட்சார்த்திகள் வினாவிலுள்ள விடயங்களின் தாக்கங்களுக்குப் பதிலாக, வினாவின் (1) முதல் (3) வரையான தகவல்கள ஒவ்வொன்றும் கண்காய்வாளர் அறிக்கையில் கொண்டுள்ள தாக்கம்பற்றி இனங்காண முயற்சித்தனர். ஒருசில பரீட்சார்த்திகளே பாவனையில் இல்லாத தொக்குத் தொடர்பில் குறைஏற்பாட்டுப் பெறுமதி மற்றும் கணக்காய்வுப் பொருண்மை தொடர்பில் அதன் தாக்கம் பற்றி இனங்கண்டனர். ஏனைய பரீட்சார்த்திகளில் பலர் பிரச்சினையை இனங்காணத் தவறியிருந்தனர். இதன்காரணமாக கணிசமான பரீட்சார்த்திகள் கீழே தரப்பட்டுள்ளவை போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்:

- முறையான கட்டுப்பாட்டுச் சூழல் இல்லாமை.
- இலாபத்தினை அதிகரித்துக் காட்டும் சாத்தியம் காணப்படல்.
- கம்பனி இரு பங்குதாரர்களால் முகாமை செய்யப்படுதல்.
- பழைய வடிவமைப்பு ஆடைகள் கழிவு விலைகளில் விற்கப்படக்கூடியதாக இருத்தல்.
- கம்பனி நட்டமடைதல்.
- தரப்பட்ட விடயங்கள் கணக்காய்வு அபிப்பிராயத்தில் கொண்டுள்ள தாக்கங்களை பகுப்பாய்வு செய்வதற்குப்பதிலாக, திருத்தப்பட்ட அல்லது முனைப்பழி அபிப்பிராயங்களை தருதல்.

**பகுதி B** யில் திருத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம் மற்றும் விடய அழுத்தப் பந்தியுடன் கூடிய கணக்காய்வு அபிப்பிராயம் ஆகிய இரண்டிற்கும் இடையிலான வித்தியாசமும் அவை ஒவ்வொன்றிற்கும் உதாரணங்களும் வினவப்பட்டது. வினாவின் எளிமையான இந்தப் பகுதிக்கான பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. அனேக பரீட்சார்த்திகள் வேறுபாட்டினை இனங்கண்டிருந்த போதிலும் உதாரணங்கள் தந்திருக்கவில்லை. கணிசமான பரீட்சார்த்திகள் வித்தியாசத்தினை குறிப்பிடுவதற்குப் பதிலாக, திருத்திய அபிப்பிராயம் மற்றும் முனைப்பழி அபிப்பிராயம் ஆகிய இரண்டையும் வேறுபடுத்த முனைந்ததுடன், சிலர் திருத்திய அபிப்பிராயத்தின் மூன்று வகைகளை விபரித்திருந்தனர். இவற்றின் காரணமாக பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு அதிக புள்ளிகளை பெறமுடியவில்லை.

**வினா இல. 07** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினாவில் உறுதிப்படுத்தல் ஈடுபாடொன்றின் பிரதான மூலகங்கள் பற்றி வினவப்பட்டது. இந்த வினாவுக்கு ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் அதிக புள்ளிகளை பெறக்கூடியதாக இருந்தபோதிலும், பல பரீட்சார்த்திகளால் சராசரிப் புள்ளிகளையே பெறமுடிந்தது. சில பரீட்சார்த்திகள் கூறுகளை இனங் கண்டபோதிலும், அந்தக் கூறுகளை பொருத்தமான முறையில் விபரித்திருக்கவில்லை. அனேகமான பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொள்ள முடியாது இருந்ததுடன், அதன்காரணமாக பொருத்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர். சிலர் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் மட்டங்களை விபரித்தும், வேறுசிலர் சான்றுறுதிப்படுத்தல், அவதானித்தல், கணிப்பீடு, உறுதிப்படுத்தலை கோருதல் போன்ற கணக்காய்வுச் சான்றுகளை சேகரிப்பதற்கான வேறுபட்ட அணுகுமுறைகளை விபரித்திருந்தனர்.

## பிரிவு C

இரண்டு (02) கட்டாயமான வினாக்கள்

**வினா இல. 08** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

**பகுதி A** ஆனது நான்கு (4) உபவினாக்களை கொண்டிருந்தது.

பகுதி **(a)** யில் தரப்பட்டுள்ள தருநிலையின் அடிப்படையில், உண்மையான வியாபாரச் சூழலொன்றில் அகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை எவ்வாறு இனங்காண்பது என்பதுபற்றி வினவப்பட்டது. பகுப்பாய்வு இயலுமையினை கொண்டிருந்த சில பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு அதிக புள்ளிகளை பெற்றனர். கோட்பாடுகளை நிடமான வியாபாரச் சூழலுக்கு பிரயோகிக்க முடியாத அனேகமான பரீட்சார்த்திகள் புள்ளிகளை பெறமுடியாதிருந்தனர். இந்தப் பகுதியின் பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. சில பரீட்சார்த்திகள் போதிய அறிவின்மை காரணமாக கீழ்வரும் பொருத்தமற்ற விடைகளை எழுதினர்:

- அகக் கட்டுப்பாட்டின் பலவீனமாக மாதம் இருதடவை மேலதிகநேர வேலைக் கொடுப்பனவினை வழங்குதல்.
- வருகைக்கான உபகாரக் கொடுப்பனவு என்பதனை சரியாக விளங்கிக்கொள்ள முடியாத சில பரீட்சார்த்திகள் வருகைப் பதிவேடுகள் அடிப்படையில் வருகை உபகாரக் கொடுப்பனவகளை வழங்குதல் தவறானது என எழுதியிருந்தனர்.

மேற்கூறப்பட்டவை தவிர்ந்த பொருத்தமற்ற விடைகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

- சம்பளப்பட்டியல் முறைமையால் OT கணிக்கப்படுதல்.
- வரவுப் பதிவேட்டின் அடிப்படையில் OT செலுத்தப்படுதல்.
- மேலதிகநேர வேலை ஊதிய வீதங்களை உற்பத்தி மேற்பார்வையாளர் தீர்மானித்தல்.

**பகுதி (b)** யில் மேலே பகுதி (a) யில் இனங்காணப்பட்ட அகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களிலிருந்து விடுபட பரிந்துரைகள் கேட்கப்பட்டன. அகக்கட்டுப்பாட்டு பலவீனங்களை சரியாக இனங்கண்டுகொண்ட பரீட்சார்த்திகள் பொருத்தமான பரிந்துரைகளை எழுதியிருந்தனர். பலவீனங்களை சரியாக இனங்காண முடியாத பரீட்சார்த்திகளுக்கு பொருத்தமான பரிந்துரைகளை எழுத முடியாதிருந்தது. இந்தப் பகுதியின் பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. உரியபாட அறிவினைக் கொண்டிராத அனேகமான பரீட்சார்த்திகள் கீழே தரப்பட்டுள்ளவை போன்ற பொருத்தமற்ற பரிந்துரைகளை எழுதியிருந்தனா:

- சுகல ஊழியர்களுக் மனிதவளப் பிரிவால் சம்பளப்பட்டியல் முறைமையில் பதியப்படல்.
- HR நிறைவேற்று அலுவலரின் அங்கீகாரத்துடன் சம்பளப்பட்டியலில் பதிவுசெய்தல்.
- வருகை உபகாரக் கொடுப்பனவு வீதங்கள் HR முகாமையாளரால் தீர்மானிக்கப்படுதல்.
- சம்பளப் பட்டியல் HR நிறைவேற்று அலுவலரினால் பராமரிக்கப்பட வேண்டும்.
- காலத்தையும் செலவையும் சேமிக்க சம்பளம் மாதமொருமுறை செலுத்தப்படதல்.
- வருகை உபகாரக் கொடுப்பனவு செயலாற்றலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படல்.

**பகுதி (c)** யில் கணனிமயப்படுத்திய சம்பளப்பட்டியல் முறைமை தொடர்பான இடர்கள் வினவப்பட்டன.

பாட அறிவினைக் கொண்ட ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் இந்தப் பகுதிக்கான முழுப் புள்ளிகளை பெற்றனர். இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தப் பெறுபேறு சராசரி மட்டத்தில் காணப்பட்டது. போதிய அறிவினை கொண்டிராத, வினாவினை விளங்கிக்கொள்ள முடியாத பல பரீட்சார்த்திகள் பொருத்தமற்ற விடைகளை எழுதியிருந்த போதிலும் அவற்றிற்கு புள்ளிகள் வழங்கப்படவில்லை.

எழுதப்பட்ட பொருத்தமற்ற விடைகள் சில் கீழ்வருமாறு::

- கம்பனியிலிருந்து இராஜினாமா செய்த ஊழியர்கட்கு கொடுப்பனவு வழங்கப்படல்.
- வரவுகளை பதிவுசெய்ய விரல் அடையாள எந்திரத்தினை நிறுவுதல்.
- சம்பளம் வழங்கப்பட்டதனை உறுதிசெய்ய கையொப்பத்தினை ஊழியர்களிடமிருந்த பெறுதல்.

**பகுதி** (d) யில் சம்பளப்பட்டியலில் உட்படுத்தப்படும் அல்லது பதிவுசெய்யப்படும் தகவல்களை பலம் மிக்கதாகவும் பாதுகாக்கவும் மேற்கொள்ளப்படும் மூன்று (3) பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் இரண்டு (2) பிரயோகக் கட்டுப்பாடுகள் பற்றி வினவப்பட்டது. மிகவும் இலகுவான இந்த வினாவின் பெறுபேறுகள் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டன. தரப்பட்ட விடைகளிலிருந்து பரீட்சார்த்திகள் பொதுக் கட்டுப்பாடு மற்றும் பிரயோகக் கட்டுப்பாட்டிற்கு இடையில் வேறுபாட்டை புரியாதிருப்பது தெளிவாகும். எனவே பல பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு புள்ளிகளைப் பெறவில்லை. உதாரணமாக, பிரயோக கட்டுப்பாடுகளாக கடவுச்சொற் பாதுகாப்பு, பௌதிக பாதுகாப்பு, மென்பொதிகள் மீதான வைரஸ் காப்பு ஆகியன தரப்பட்டிருந்தன.

**பகுதி <u>B</u>** யில் தரப்பட்ட தருநிலை ஆய்வு அடிப்படையில் மூன்று உபவினாக்கள் தரப்பட்டன.

பகுதி (a) யில் தரப்பட்டசில் விடயங்கள் தொடர்பாக போதிய, பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெறுவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய மேலதிக கணக்காய்வு விதிமுறைகள்பற்றி வினவப்பட்டது. இந்த விடயம்பற்றி பரீட்சார்த்திகளுக்கு போதுமான அறிவு இல்லாமையால் அவர்களால் போதியளவு புள்ளிகளை இந்த வினாவுக்கு பெறமுடியவில்லை. ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் கணிசமான புள்ளிகளை பெற்றிருந்தனர். பல விடைகள் தொர்பற்றவையாக இருந்ததுடன் உதரரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன:

- பின்னைய தீர்ப்பனவகளை செவ்வைபார்த்தல்- வினாவில் இது ஏற்கனவே செய்யப்பட்டது.
- எந்திர அதிகரிப்பு காணப்பட்டபோதிலும் ஆதன உரித்து உறுதிகளை செவ்வை பார்த்தல்.
- வினாவில் கடன் உடன்படிக்கை ஏற்கனவே செவ்வை பார்க்கப்பட்டதென கூறியிருந்தும் சில விடைகளில் கடன் உடன்படிக்கையினை செவ்வை பார்த்தலென எழுதியிருத்தல்.

பகுதி (b) யில் தருநிலை ஆய்வில் தரப்பட்ட நிதிக்கூற்றுக்களின் தகவல்களின் அடிப்படையில் வியாபார கடன்பட்டோர் மற்றும் மொத்த இலாபம் பற்றிய பகுப்பாய்வு விதிமுறைகள் பரீட்சிக்கப்பட்டன. இந்த வினாவுக்கான பெறுபேறுகள் சிறப்பாக காணப்பட்டதுடன் பல பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகள் பெற்றனர். எனினும் போதிய அறிவினை கொண்டிராத சில பரீட்சார்த்திகள், பகுப்பாய்வு விதிமுறைகளை இனங்காண்பதற்குப் பதிலாக, பொருத்தமற்ற, உதாரணமாக, விடைகளை எழுதியிருந்தனர்:

- உறுதிப்படுத்தற் கடிதங்களை கோருதல்.
- முகாமைப் பிரதிநிதித்துவத்தினை பெறுதல்.
- தொக்கு அறிக்கைகளை செவ்வை பார்த்தல்.
- விற்பனை, விற்பனைத் திரும்பல் மற்றும் அறவிடமுடியாக் கடன்களை செவ்வைபார்த்தல்.

பகுதி (c) யில் நிதிக்கூற்றுக்களில் தரப்பட்ட கணக்கு மீதிகளின் உறுதிப்பாடு பற்றி வினவப்பட்டது. மிகவும் எளிமையான இந்த வினாவுக்கு அனேக பரீட்சார்த்திகள் முழுப்புள்ளிகளை பெறக்கூடியதாக இருந்தது. ஒட்டுமொத்தப் பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தன. எனினும் சில பரீட்சார்த்திகள் கால இறுதி நிதிக்கூற்றுக்களிலுள்ள கணக்கு மீதிகளின் கணக்காய்வு உறுதிப்பாடுகளான □ரணத்துவம், கடமைகளும் கடப்பாடுகளும், மதிப்பீடு ஒதுக்கம் மற்றும் இருப்பு ஆகியவற்றிற்கு பதிலாக பொருத்தம் அறட்ற விடைகளான வெட்டுப்புள்ளிச் சோதனை, மூன்றாம் தரப்பு உறுதிப்படத்தல், கட்டுப்பாட்டுக் கணக்குகளுடன் கணக்கிணக்கம் ஆகியவற்றை எழுதியிருந்தனர்.

**வினா இல. 09** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

**<u>பகுதி A</u>** நான்கு(4) உபவினாக்களை கொண்டிருந்தது. ஒரு வினா கோட்பாடு பற்றியதாகவும் ஏரனய மூன்று வினாக்களும் தரப்பட்ட தருநிலை ஆய்வு பற்றியதாகவும் இருந்தன.

பகுதி (a) யில் கணக்காய்வு இடர் என்பதன் கருத்து வினவப்பட்டது. இந்த வினாவுக்கான பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தது. பல பரீட்சார்த்திகள் முழுப்புள்ளிகள் பெற்றனர். எனினும் போதிய அறிவற்ற சில மாணவர்கள் கணக்காய்வு இடராக கீழ்வருவனபோன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்:

- கணக்காய்வு அபிப்பிராயத்தினை பாதிக்கின்ற இடர்.
- போதிய, பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை பெறுவது தொடர்பிலான இடர்.
- பொருண்மையான பிறழ்கூற்று பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிப்பதில் இடர்.

பகுதி (b) யில் கம்பனி மற்றும் அதன் சூழல் பற்றிய அறிவு தொடர்பிலான விளக்கம் வினவப்பட்டது. மிகவும் எளிமையான இந்த வினாவுக்கு கணிசமான பரீட்சார்த்திகள் முழுப்புள்ளிகளை பெற்றிருந்தனர். இந்தப் பகுதிக்கு ஒட்டுமொத்த பெறுபேறு சராசரி மட்டத்தில் காணப்பட்டன. கணிசமான பரீட்சார்த்திகள் கீழ்வரும் தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்:

- கம்பனி மற்றும் அதன் சூழல் பற்றி விளக்கத்தினை தெரிந்துகொள்ள கம்பனி ஊழியர்கள் மற்றும் முன்னைய ஆண்டு கணக்காய்வாளரிடம் விசாரணை செய்து தெரிந்துகொள்ளல்.
- கம்பனிச் செயற்பாடுகளை அவதானித்தல்.
- பால் சந்தை மற்றும் வழங்குனர் பற்றிய விளக்கம்.

பகுதி (c) யில், தரப்பட்ட தருநிலை ஆய்வு அடிப்படையில், கம்பனியின் கணக்காய்வை மேற்கொள்ளும் போது கவனத்திற் கொள்ளவேண்டிய கணிசமான இடரினை கொண்ட பகுதிகளை இனங்காண்பது தொடர்புபட்ட பரீட்சார்த்தியின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. இனங்காணப்படவேண்டிய இந்த இடர்ப்பகுதிகள் வினாவில் தெளிவாக தரப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் செய்யவேண்டி இருந்தது வினாவினை நன்றாக வாசித்து அடக்கத்தை விளங்கிக்கொள்வது மாத்திரமே. அனேக பரீட்சார்த்திகள் வினாவினை விளங்கிக் கொள்ள முடியாது அதிக புள்ளிகளை பெறத் தவறியிருந்தனர். மிகவும் குறைந்த எண்ணிக்கையான பரீட்சார்த்திகளே இந்த வினாப் பகுதிக்கு முழுப் புள்ளிகளை பெற்றனர். இந்த வினாவுக்கான ஒட்டுமொத்த பெறுபேறு ஓரளவு திருப்திகரமாக இருந்தது.

பகுதி (d) இல் கம்பனியொன்றின் நிரந்தர கணக்காய்வுக் கோவையில் அடங்கும் இரு வகையான தகவல்கள் பற்றி வினவப்பட்டது. அனேகமான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை எழுதி முழுப் புள்ளிகளை பெற்றனர். இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தப் பெறுபேறு திருப்திகரமாக இருந்தது. இருப்பினும் சில விடைகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டுப் பிரதி, கணக்காய்வுத் திட்டத்தின் பிரதி, கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர்/ வங்கி உறுதிப்படுத்தல்கள்.'. வங்கிக் கூற்றுக்கள் போன்ற தொடர்பற்ற விடைகளை கொண்டிருந்தன.

**பகுதி B** மூன்று (3) உப வினாக்களை கொண்டிருந்தது.

பகுதி (a) யில் காணியின் மதிப்பீட்டினை மீளாய்வு செய்தலில் மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்காய்வு விதிமுறைகள் பற்றி வினவப்பட்டது. கற்கைப் புத்தகத்தினை நன்கு வாசித்த பரீட்சார்த்திகள் அதிக புள்ளிகளை பெறமுடிந்தது. அனேகமான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை தரவில்லை. இந்த வினாவிற்கான ஒட்டுமொத்த பெறுபேறு மிகமோசமாக இருந்தன. காணியின் மதிப்பீட்டினை மீளாய்வு செய்தலில் மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்காய்வு விதிமுறைகளை பட்டியலிடுமாறு கேட்டதற்கு, அனேக பரீட்சார்த்திகள் பொருத்தமற்ற விடைகளை எழுதியிருந்ததுடன், அவற்றில் சில கீழ்வருமாறு:

- காணி உறுதியினை சரிபார்த்தல்.
- காணி மீதிகளை சரிபார்த்தல்.
- முதிப்பீட்டுச் செயன்முறையை அவதானித்தல்.
- தேய்மானத்தினை கணித்தல்.
- குாணியின் மதிப்பீட்டுப் பெறுமதியை நிதிக்கூற்றுடன் ஒப்பிடுதல்.
- குாணியின் அளவினை மதிப்பிடல்.

பகுதி (b) யில் எழுத்துமூல முகாமைப் பிரதிநிதித்துவக் கடிதம் என்பதன் கருத்து வினவப்பட்டது. மிக இலகுவான இந்த வினாவுக்கான பெறுபேறு திருப்திகரமாக இருந்ததுடன் அனேகமான பரீட்சார்த்திகள் அதிக புள்ளிகளை பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் எழுதியிருந்த பொருத்தமற்ற சில விடைகள் கீழ்வருமாறு:

- முகாமைப் பிரதிநிதித்துவக் கடிதம் என்பது முகாமைப் பொறுப்பினை உறுதிப்படுத்தும் கடிதம்.
- மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறும் சான்றுகளிலும் பார்க்க முகாமைப் பிரதிநிதித்துவம் அதிக நம்பகத்தன்மை உடையது.

பகுதி (c) யில் கணக்காய்வுச் சான்றாக முகாமைப் பிரதிநிதித்துவத்தின் தரம் மற்றும் நம்பகத்தன்மை பற்றி வினவப்பட்டது. வினாவினை சரியாக விளங்கிக்கொண்ட ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் முழுப் புள்ளிகளை பெற்றனர். ஏனைய பரீட்சார்த்திகள் எழுதிய பொருத்தமற்ற விடைகளில் சில வருமாறு:

- மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறும் சான்றுகளிலும் பார்க்க முகாமைப் பிரதிநிதித்துவம் அதிக நம்பகத்தன்மை உடைய கணக்காய்வுச் சான்றாகும்.
- சாத்தியமான ஒவ்வொரு தடவையும் கணக்காய்வாளர் கணக்காய்வுச் சான்றாக முகாமைப் பிரதிநிதித்தவத்தை றெறல்வேண்டும்.
- சில பரீட்சார்த்திகள் கணக்காய்வுச் சான்றாக முகாமைப் பிரதிநிதித்துவத்தின் தரம் மற்றும் நம்பகத்தன்மை பற்றி விபரிப்பதற்குப் பதிலாக முகாமைப் பிரதிநிதித்தவத்தின் கருத்து, பொருள்வரையறை ஆகியவற்றை குறிப்பிட்டிருந்தனர்.

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தப் பெறுபேறு சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

- - -

**பரீட்சார்த்திகளின் தகுதி மட்டத்தினை அதிகரித்து, அதன்மூலம் பரீட்சைப் பெறுபேற்றினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

- பரீட்சார்த்திகள் நன்கு கற்று அதிலுள்ளவற்றை விளங்கிக்கொள்ளல் வேண்டும்.
- பாடம் தொடர்பான கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் கணக்காய்வு தொடர்புபட்ட பிற ஆக்கங்களை வாசித்தல்.
- வினாப்பத்திர இறுதியில் தரப்பட்ட வினா வினைச்சொற்களின் பொருள்வரையறைகளை நன்கு விளங்கிக்கொண்டு, அவற்றின் அடிப்படையில் விடையெழுத பயிற்சிசெய்தல்.
- குறைந்தபட்சம் கடந்த ஐந்து வருட வினாப்பத்திரங்களை நன்கு வாசித்து பரீட்சகரின் எதிர்பார்ப்பினை விளங்கிக்கொள்வதும், நன்கு பயிற்சிசெய்து விடையெழுதும் முறையை விளங்கிக்கொள்ளலும்.
- வினாப்பத்திரத்தில் தரப்படும் கோட்பாடுகள் மற்றும் அவற்றின் பிரயோகம் பற்றிய பரீட்சகரின் எதிர்பார்ப்பு ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பை விளங்கிக்கொள்ளல்.
- கற்கைப் புத்தகத்தில் கடந்த காலங்களில் பரீட்சித்த பகுதிகளை விளங்கிக்கொண்டு கற்கைப் புத்தகத்தில் அவைபற்றி சிறிய குறிப்புக்களை எழுதுதல்.
- பரீட்சார்த்திகள் கடந்தகால வினாப்பத்திர வினாக்களை அவற்றில் குறிப்பிடப்பட்ட நேர அடிப்படையில் விடையெழுத பயிற்சிசெய்தல் வேண்டும். இது கால முகாமைத்துவத்தை மேம்படுத்தும்.
- பாடத்திட்ட உள்ளடக்கத்தை மனனம்செய்ய ஏதுவாக ஒவ்வொரு கற்கை அத்தியாயம் பற்றிய சிறுகுறிப்புக்களை எழுதி ஓய்வு நேரம் கிடைக்கும்போது அவற்றை வாசித்தல்.
- பரீட்சார்த்திகள் பரீட்சைகளில் தெளிவாக எழுத பழகிக்கொள்ள வேண்டும்.
- பரீட்சார்த்திகள் விடையெழுத ஆரம்பிக்க முன்னர் வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும்.
- வினாப்பத்திரத்தில் தரப்பட்ட வினாக்களை விளங்கி பொருத்தமான சரியான விடைகளை எழுதுவதற்கு, பரீட்சார்த்திகள் தெளிவான மனநிலையை கொண்டிருக்க வேண்டும்.
- ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகள் அடிப்படையில் நேரம் ஒதுக்கி அதற்கு அமைய விடையெழுதுவதன் மூலம் பரீட்சார்த்திகள் எல்லா வினாக்களுக்கும் உரிய முறையில் விடையளிக்க முடியும்.
- வினாப்பத்திரத்தில் உள்ளவாறு விடைகள் பொருத்தமாகவும் சரியாகவும் இலக்கமிடப்பட வேண்டும்.
- வினாக்களில் கேட்கப்பட்ட கோட்பாடுகள் மற்றும் அவற்றின் பிரயோகம் பற்றி நன்கு விளங்கிக்கொள்வதுடன் தேவையான இடங்களில் உதாரணங்கள் தரப்படவேண்டும்.
- விடைத்தாள்களை கையளிக்க முன்னர் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையெழுதி உரிய முறையில் இலக்கம் இடப்பட்டுள்ளனவா என சரிபார்க்க வேண்டும்.

- * * * -